பணம் வசூல் செய்து, இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், இலவசக் கல்வி அமுலுக்கு வந்தது. வேண்டுமென்றால் எங்கள் கொள்கையைத் தொடர்ந்து கைக் கொள்வதா என்று கருதாமல், எங்கள் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்கப் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி கொண்டு வரவேண்டுமென்ற கொள்கையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எடுக்கேஷனல் ரிஃபார்ம்ஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அமைச்சரின் அறிக்கையில் தெரிவிக்கிறார்கள். அந்த கமிட்டிக்கு என்ன என்ன டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் என்று கூறவில்லை. கல்விமுறையை 10—2—3 என்ற அடிப்படையில் 15 ஆண்டு கல்விக் காலம் என்று கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், எந்தக் கரணத்தாலும் இலவசக் கல்வியை மறுபரிசீலனை செய்ய அந்தக் கமிட்டிக்கு ரெஃபரன்ஸ் அனுப்பக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிகளை ஏ விங், பி விங், சி விங் என்று பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்காகப் பல்வேறு ஆணைகள் பிறப்பித்தாலும் இதுவரையில் அந்த ஆணைகள் செயல் படுத்தப்படவில்லை. போர்டு ஸ்கூல்களுக்கு விதிமுறைகள், எம்.இ.ஆர். விதிமுறைகள் பி.எஸ்.எஸ். விதிமுறைகள் இவ்வாறு பல்வேறு விதி முறைகளிருக்கின்றன. அவை சரியாகச் செயல்படவில்லை. இந்த விதி முறைகளில் ஆசிரியர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய விதிமுறைகளின்படி அவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. ஆனால், அவர்களுக்கு தீமை கொடுக்கக்கூடிய விதிமுறைகள்தான் பின்பற்றப்படுகின்றன. ஆகவே, மாநிலத்தில் வேலை செய்கின்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரி விதிமுறைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழைப் பாடமொழியாக இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றையதினம், பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.யூ.சி. மாணவர்களுக்குத் தமிழில் போதிக்கிறோம். அவர்கள் தேர்வு தமிழில் எழுத வில்லையென்றால், அவர்களுக்கு அளிக்கின்ற இந்த ஸ்டைஃபன்டை திரும்பப் பெற்றுக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படுகிறது. ஆனால், சட்டக் கல்லூரியில் தமிழில் படிக்கின்ற மாணவர்கள் ஆங்கிலத்தில்தான் பரீட்சை எழுதவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, அவர்களுக்கும் தமிழில் பரீட்சை எழுத வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாகக் கல்லூரி. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், யூ.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் ஆஃப் பே அமுல்படுத்தப்படவில்லை. அந்தத் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கல்லூரி ஆசிரியர்கள் அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நாட்டில் பல்வேறு மாநிலங்களில் யூ.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் ஆஃப் பே அமுல்படுத்தப்